<u>**In the court of the Additional Subordinate Judge, Tenkasi.**</u>

<u>Deposition of Witness</u>

OS.380/2022

வா.சா 2   மகேஸ்வரி

| | | |
|---|---|---|
| Name | : | மகேஸ்வரி |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Occupation | : | |
| Age | : | |
| Date | :16.06.2026 | |

சாட்சி அழைப்பாணையின் பேரில் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை

நான் தற்போது புதூர் பேரூராட்சியில் வரி வசூலராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. புதூர் எஸ்.பேரூராட்சி மன்றம் லாலாக்குடியிருப்பு 1வது வார்டு 1வது தெரு, கதவு எண். 54ல் உள்ள வீட்டு வரிவிதிப்பு பதிவேடு 2010 முதல் 2026 வருடம் வரை பதிவேடு கொண்டு வந்துள்ளேன். அது மூ.த.சா.ஆ1. துரைச்சாமி என்பவரது பெயரில் கதவு எண். 54 உள்ள வீட்டிற்கு வீட்டு வரி விதிப்பு எந்த ஆண்டு முதல் எந்த ஆண்டு வரை உள்ளது என்றால் 2009 முதல் 2020வரை துரைச்சாமி பெயரில் இருந்தது. 2020ல் இருந்து தற்போது வரை இசக்கியம்மாள் என்பவரது பெயரில் இருந்து வருகிறது. வீட்டு வரி விதிப்பு ஒரு நபர் பெயரில் இருந்து மற்றொரு நபர் பெயருக்கு மாற்றப்படுமேயானால் உரிமை மாற்றம் ஆவணம் இருந்தால் மட்டும் தான் மாற்றப்படும் என்றால் சரிதான். பெயர் மாற்றுவதில் ஆட்சேபனை மனு கொடுக்கப்பட்டால் பெயர் மாற்றம் செய்வது நிறுத்தி வைக்கப்படும் என்றால் சரிதான். ஒரு ஆவணத்தில் வீட்டு வரி தீர்வை மாற்றக்கூடாது என்ற நிபந்தனை இருந்தால் வரி விதிப்பில் பெயர்மாற்றம் செய்ய

முடியாது என்றால் சரிதான்.

பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் 2023ம் ஆண்டில் இருந்து புதூர் பேரூராட்சி மன்றத்தில் பணிபுரிந்து வருகிறேன். மூ.த.சா.ஆ1ல் துரைச்சாமி பெயரில் இருந்து இசக்கியம்மாள் பெயருக்கு வரி விதிப்பு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனுடைய நடவடிக்கை எண். 35/2020 நாள் 10.11.2020 என்றால் சரிதான். இசக்கியம்மாளுக்கு துரைச்சாமி எழுதி கொடுத்த நன்கொடை ஆவணத்தின் அடிப்படையில் தான் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தின் நகல் எங்களது அலுவலகத்தில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 10.11.2020 முதல் தற்போது வரை இசக்கியம்மாள் தான் வீட்டு வரி செலுத்தி வருகிறார் என்றால் சரிதான்.

(Sd)K.சுதா ராணி,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.